படிவம் இலக்கம் - 01

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : தேர்தல் ஆணைக்குழு

| குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் | | நிறுவனத்தினால் குறைபாடுகளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 01 | 2017.06.26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்திக்கமைய, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் புறத்தொதுக்கல் தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர்ஜெனரல்அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படாமை. | தேர்தல் ஆணைக்குழுவின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டைப் இற்றைப்படுத்தல் மற்றும் அந்த இற்றைப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டை CIGAS நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒப்பீடு செய்யும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த காரணத்தால், அப்பணிகள் நிறைவடையும் வரை இத்தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்க முடியவில்லை. தற்போது அப்பணிகள் நிறைவடைந்துள்ளதால், 2026 ஆம் ஆண்டிலிருந்து உரியவாறு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| 02 | அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்படாமை (வர்ணம் பூசப்படாமை). | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 103 மற்றும் 104 ஆம் உறுப்புரைகளின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சுதந்திரமான, நீதியான மற்றும் நம்பகத்தன்மையான தேர்தல்கள் நடாத்தப்படுகின்றன. அனைத்துத் தேர்தல் பங்குதாரத் தரப்பினருடனும் பக்கச்சார்பற்ற முறையில் செயற்பட வேண்டியது அவசியமானது என்பதால், வாகனங்களில் "தேர்தல் ஆணைக்குழு" எனும் பெயர்ப்பலகை (Label) மாத்திரம் வாகனங்களில் காட்சிப்படுத்தப்படுகின்றது.<br><br>அதேபோன்று, தேர்தல் காலங்களின் போது தேர்தல்களுடன் தொடர்புடைய பாதுகாப்பான மற்றும் இரகசிய ஆவணங்கள் தேர்தல் ஆணைக்குழுவிற்குச் |

| | | |
|---|---|---|
| | | சொந்தமான வாகனங்களில் கொண்டு செல்லப்படுவதால், அவை சீர்குலைக்கும் குழுக்களின் இலக்கிற்கு இலகுவாக உள்ளாகலாம் என்பதையும், நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகள், தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மை மற்றும் நடுநிலைத்தன்மை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு செயற்படுவதோடு, தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படும் விதம் / அது தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகளுக்காக VMS (Vehicle Management System) கணினி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஏனைய நிர்வாகக் கட்டமைப்பு முறைகளும் பயன்படுத்தப்படுவதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற. |
| 03 | மொத்த பணியாட் குழுவினர்களையும் உள்ளடக்கிய வகையில், செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்படாமை. | அரச துறையில் மனித வள அபிவிருத்தி எனும் தலைப்பிலான அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் 02/2018 ஆம் இலக்க மற்றும் 2018.01.24 ஆம் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் மூலம், பணியாட் குழுவினர்களின் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு, செயலாற்றுகை மதிப்பீட்டுப் படிவங்களுக்கு மேலதிகமாகசெயலாற்றுகை உடன்படிக்கைகளில் கையொப்பமிடுதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு பின்னர், மேற்படி தலைப்பிலான பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 02/2018 (1) ஆம் இலக்க மற்றும் 2023.11.30 ஆம் திகதிய சுற்றறிக்கையின் மூலம், பொது நிர்வாகச் சுற்றறிக்கை 02/2018 இன் (1) ஆம் பந்தி திருத்தம் செய்யப்பட்டு, அதில் குறிப்பிட்டுள்ளவாறு "வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கைகளில்" கையொப்பமிடுவது தொடர்ந்தும் அவசியமில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.விடயம் அவ்வாறிருக்கின்றமையினால்தொடர்ந்தும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கைகளில் கையொப்பமிடுதல் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதோடு |

| | | |
|---|---|---|
| | | அலுவலர்களின் செயலாற்றுகையை விருத்தி செய்வதற்காக மேற்படி சுற்றறிக்கைகளில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்றுகை மதிப்பீட்டுப் படிவங்களை முறையானவாறு பூரணப்படுத்துவதற்கும், அவற்றைப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதோடு,பொது நிர்வாகச் சுற்றறிக்கை 02/2018 இன் (1) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய, மனித வள அபிவிருத்தி திட்டத்தை வருடாந்தம் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் முறையான அடிப்படையில்மேற்கொள்ளப்படுகின்றதென்பதை அறியத்தருவதோடு, அதன் அடிப்படையில் முன்னைய ஆண்டுகளிலும் முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது. |

பிரதான கணக்கீட்டு அலுவலர்
ரசிக்க பீரிஸ்
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

திகதி: 2026.06. 03

ரசிக்க பீரிஸ்
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை, இராஜகிரிய